**செய்தி வெளியீடு எண்: 132/2023** **நாள்: 10.11.2023**

## பத்திரிக்கைச் செய்தி

## மெட்ரோ இரயில் நிலையங்களில் மெட்ரோ மார்கழி இசை மற்றும் கலை நிகழ்ச்சிகள்

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், தமிழ் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை கொண்டாடுவதன் ஒரு பகுதியாக, சென்னை முழுவதும் உள்ள பல இசைக் கலைஞர்கள் மற்றும் அமைப்புகளுடன் இணைந்து சென்னை மக்களுக்கு ஆண்டுதோறும் டிசம்பர் மாதத்தில் மெட்ரோ மார்கழி இசை மற்றும் கலை நிகழ்ச்சிகளை வழங்கி வருகிறது.

இதன் தொடர்ச்சியாக நடப்பாண்டில் வருகின்ற 09.12.2023 முதல் 01.01.2024 வரை அனைத்து மெட்ரோ இரயில் நிலையங்களிலும் மெட்ரோ மார்கழி இசை மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

மெட்ரோ மார்கழி இசை மற்றும் கலை நிகழ்ச்சிகளில் பங்குபெற ஆர்வமுள்ள இசைக் கலைஞர்கள் மற்றும் அமைப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ள இணைப்பை கிளிக் செய்யவும் அல்லது க்யூ.ஆர். குறியிடுனை ஸ்கேன் செய்து 28.11.2023 தேதிக்குள் பதிவு செய்யவும்.

https://docs.google.com/forms/d/e/1FAIpQLSdLBf6ziwvnLFU- I0f1d4v4HDuJ0MlkG9-E95A0-78j1SUhg/viewform?pli=1

மெட்ரோ மார்கழி இசை மற்றும் கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்க உள்ள ஆர்வலர்கள் தங்களது பதிவினை செய்த பின்னர் அதற்கு ஏற்றார் போல் நாள், நேரம் மற்றும் இடம் தேர்வு செய்யப்பட்டு நிகழ்ச்சியின் அட்டவணை பின்னர் அறிவிக்கப்படும். எனவே, நிகழ்ச்சியில் பங்கேற்கும் ஆர்வலர்கள் தங்களது பதிவினை உடனடியாக பதிவு செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**